# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032

தொலைபேசி 044–22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

இணையதள முகவரி www.tnlbo.tn.gov.in


**முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப. (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 249/மா/2025**

**நாள்: 17.07.2025**

தலைவர்
குடிசை வாழ்வோர் நல உரிமைச் சங்கம்
அஸ்தினாபுரம், சிட்லபாக்கம்
சென்னை --- முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி --- எதிர்மனுதாரர்

சென்னை–64, சிட்லபாக்கம் (அஸ்தினாபுரம்), அண்ணா நகர், பெரியார் சாலை, எண் 1 என்கிற முகவரியில் இயங்கும் குடிசை வாழ்வோர் நல உரிமைச் சங்க தலைவரின் 04.12.2024 நாளிடப்பட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 05.12.2024 அன்று பெறப்பட்டு 249/மா/2025 என எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது:

**ஆணை**

சென்னை–64, சிட்லபாக்கம் (அஸ்தினாபுரம்), அண்ணா நகர், பெரியார் சாலை, எண் 1 என்கிற முகவரியில் இயங்கும் குடிசை வாழ்வோர் நல உரிமைச் சங்க தலைவரின் 04.12.2024 நாளிடப்பட்ட மனுவில் பின்வரும் புகார்களை தெரிவித்துள்ளார்:-

“செங்கற்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, வார்டு எண்.37ல் அமைந்துள்ள அண்ணாநகர், அஸ்தினாபுரம் (சிட்லபாக்கம்), பகுதி சுமார் 18.2 ஏக்கர் பகுதியிலுள்ள வீட்டுமனை மற்றும் அதிலுள்ள பழைய (மற்றும் புதிய) கட்டிடங்கள் சுமார் 65 ஆண்டுகள் முன்பிருந்து இன்றுவரை உள்ள வரிகள்அதற்குண்டான மற்றும் அரசு கட்டணங்கள் அனைத்தும் முறையாக செலுத்தி வருகின்றோம்.

மேற்கண்ட இந்த சொத்து திரு.ராமச்சந்திர அய்யருக்கு சொந்தமாக இருந்தது. அதனை அவரது ICB வங்கியில் 1965–ஆம் ஆண்டு அடமானம் வைத்து கடன் பெற்றுள்ளார். 1965ஆம் ஆண்டு அசல் வழக்கு எண்.40/65 மேற்படி ராமச்சந்திர அய்யருக்கு எதிராக செங்கற்பட்டு சட்ட கோர்ட்டில் வழக்கு நடைபெற்றது. மேற்கொண்டு வங்கியும் (Indo Commercial Bank-Punjab National Bank) இந்த சொத்து தொடர்பாக எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இந்த சொத்தில் பலர் வீடுகள் கட்டி பல ஆண்டுகளாக வசித்து அரசுக்கு செலுத்த வேண்டிய வரி வகைகளை முறையாக செலுத்தி வருவதால் பஞ்சாப் நேஷனல் வங்கி இந்த வழக்கை தொடர்ந்து

நடத்த விரும்பவில்லை. மேலும், இந்த சொத்து சம்பந்தமாக எவ்வித வழக்குகளும் நிலுவையில் இல்லை.

மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வீடு கட்டி மற்றும் குடிசை அமைத்து வாழ்ந்து வந்த அனைவரும் சுமார் 300 குடும்பங்கள் ஒன்றிணைந்து அண்ணாநகர் குடிசை வாழ்வோர் நல உரிமைச்சங்கம் என்கிற அமைப்பை ஏற்படுத்தி முறையாக பதிவு செய்து, பதிவு எண்.75/1969 பெற்று இன்று வரை நிர்வகித்து வருகிறோம்.

மேலும் வங்கி வழக்குகள் நடந்து கொண்டிருந்த பொழுது சங்கத்திற்கும் திரு.ராமசந்திர அய்யர் மனைவி திருமதி.அனந்தலெட்சுமி அம்மாள் அவர்களுக்கும் இடையே சமசரம் ஏற்பட்டு, அதன்படி மேற்படி இடத்தில் குடியிருக்கும் சுமார் 300 குடும்பங்களுக்கும் (எங்கள் சங்க உறுப்பினர்கள்) அந்த சொத்தை விற்க முடிவு செய்யயப்பட்டது. அதன்படி அப்போதைய சங்கத்தின் தலைவர் திரு.முத்துகிருஷ்ணன் அவர்களுக்கு பொது அதிகாரம் அளித்து பல்லாவரம் பதிவுத்துறை அலுவலகத்தில் சட்டப்படி பதிவு செய்யப்பட்டது, அந்த சொத்தில் குடியிருப்பவர்கள் அவரவர் வைத்திருக்கும் இடத்தினை பத்திர பதிவு செய்து சங்கத்தின் மூலம் விற்பனை தொகையை வங்கிக்கும் திருமதி.அனந்தலெட்சுமி அம்மாள் அவர்களிடம் கோர்ட்டு மூலமாக செலுத்தப்பட்டது.

விற்பனை பத்திரம் பெற்ற எமது சங்கத்தின் உறுப்பினர்கள் அவர்களால் போடப்பட்ட குடிசைகளை அகற்றி விட்டு காலமாற்றத்திற்கு ஏற்ப தாங்கள் குடியிருப்புக்கு தேவையான கட்டிடங்களை கட்டிக்கொண்டு குடும்ப உறுப்பினர்களுடன் சுமார் 60 ஆண்டுகளாக வாழ்ந்து வருகின்றனர். சம்பந்தப்பட்ட வருவாய்துறை அதிகாரிகள் மற்றும் இதர துறை அரசு அதிகாரிகள் நகர மக்கள் முறையாக நகராட்சிக்கு அனைத்து வரிகள் செலுத்தி வருவதால் அரசே முன்வந்து இருக்கின்ற மதிப்பீடு ஆவணங்களை அடிப்படையாக வைத்து பதிவு பெற்றவர்கள் மற்றும் பதிவு பெறாதவர்களும் பல வருடங்களாக வசித்து வரும் காரணத்தினால் அவர்களின் ஆவணங்களை சரிப்பார்த்து **TSLR Extracts** பட்டாவை வழங்கியுள்ளனர்.

மேலும் பத்திரபதிவுகள் நடந்துக்கொண்டிருந்த நேரத்தில் திருமதி.அனந்தலட்சுமி அம்மாள் அவர்களும் காலமாகிவிட்ட காரணத்தினால் பத்திர பதிவுசெய்து செய்யாதவர்களின் பதிவு நின்று விட்டது.

மேலும் அவர்களுக்கு யாரும் நேரடியாக வாரிசு இல்லாத காரணத்தினால் கடன் கொடுத்த வங்கிக்கும் இங்கு குடியிருப்போருக்கும் வழக்கு நடந்து வந்தது.

இடம் சம்பந்தமாக வங்கி நீதிமன்றத்தை நாடும் சமயத்தில் நீதிமன்றத்தால் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை வசூல் செய்வது மட்டுமே அன்றி குடியிருப்பவர்களை காலிச்செய்ய வைக்க வங்கிக்கு உரிமை இல்லை என்ற நீதிமன்ற தீர்ப்பும் வழங்கியுள்ளது.

இவ்வாறிருக்க S.விஜயா, க/பெ.கென்னடிநேசமணி என்பவர் தான் மேற்படி அனந்தலெட்சுமி அம்மாளின் வளர்ப்பு மகள் என்று தன்னைத்தானே கூறிக்கொண்டு தனக்குதான் இந்த சொத்தில் உரிமை உள்ளதாக பொய்யான கதைக்கட்டி பலப்பொய்யான மனுக்கள் அனுப்பி தொடர்ந்து அரசு அதிகாரிகளை மிரட்டியும், மேற்படி குடியிருப்பவர்களையும் கடிதம் மற்றும் தொலைப்பேசி வாயிலாகவும் மிரட்டி வருகின்றார்.

மேலும் மேற்கண்ட இடத்திற்கான அனுமதி மற்றும் கட்டிடத்திட்ட அனுமதி பெறாத குறிப்பிட்ட சொத்தின் உரிமையாளர் மீது நடவடிக்கை எடுப்பதற்கு வருவாய்/நகராட்சி மற்றும் பத்திரபதிவு அதிகாரிகளுக்கு பல தவறான பொய் புகார்கள் பலமுறை அனுப்பி உள்ளார்.

மேற்படி S.விஜயா என்பவருக்கு இந்த சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை. மேலும், அந்த சொத்தின் சட்டபூர்வ உரிமையாளரின் கூற்றை உறுதிப்படுத்தும் ஒரு ஆவணம் அல்லது பதிவேடு கூட இல்லாதவருக்கு அந்தப்புகார்களை தாக்கல் செய்ய எந்தவிதமான உரிமையும் இல்லை.

மேலும் சொத்தினை சட்டவிரோதமாக அபகரிக்க S.விஜயா என்பவர் திரு.ராமச்சந்திர அய்யரின் வளர்ப்பு மகள் என்ற போலியான ஆவணங்களை உருவாக்கி மிரட்டி வருகிறார். மேலும், அவர் வளர்ப்பு மகள் என்று மோசடியாக அறிவித்து சட்டத்திற்கு புறம்பாக வாரிசு சான்றிதழைப் பெற்றுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேற்படி S.விஜயாவிற்கு எதிராக போலி ஆவணம் தயார் செய்ததாக தாம்பரம் கற்றறிந்த Judicial Magistrate கோர்ட்டில் C.C.No.112 of 2020 என்ற கிரிமினல் வழக்கு இன்று வரை நிலுவையில் உள்ளது.

மேலும், அவர் மீது கிரிமினல் வழக்கு உள்ளதால், அவரது கணவர் பெயரில் மனுக்களை அனுப்பி மிரட்டி பணம் பறிக்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வருகின்றார்கள். மேலும், மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் தாம்பரம் மாநகராட்சி அலுவலகம் எங்கள் சங்கத்துடன் விரிவான விசாரணை நடத்தி எஸ்.விஜயா உள்ளிட்ட தரப்பினருக்கு நோட்டீஸ் அனுப்பியிருந்தனர். அவர்கள் எந்த விசாரணைக்கும் ஆஜராகவும் இல்லை. பதிலும் தரவில்லை. அதன் பிறகு நாங்கள் சமர்ப்பித்த அனைத்து பதிவுகள் மற்றும் ஆவணங்களை தொடர்ந்து தாம்பரம் மாநகராட்சி ந.க.எண்.2468/2022/F1 தேதி 02.08.2022 ஒரு உத்தரவு பிறப்பித்துள்ளது. எஸ்.விஜயா அந்த சொத்தின் மீது தனக்குள்ள உரிமையை நிரூபிக்கும் வகையில் எந்த ஆவணத்தையும் சமர்ப்பிக்கவில்லை மேலும் விசாரணைக்கும் ஆஜராகவில்லை. அதனால் எந்தவொரு உரிமையும் இல்லையென்று தாம்பரம் மாநகராட்சி கமிஷனர் உத்திரவு பிறப்பித்துள்ளார். இருந்தும் இங்கு குடியிருப்பவர்களை துன்புறுத்தியும், பணம் பறிப்பதை நோக்கமாக வைத்து இவ்வாறான நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறார். அவரிடம் எந்தவித ஆதாரங்கள் இல்லாத காரணத்தினால் உரிமையியல் நீதிமன்றத்தை நாடாமல் பல ரிட்மனுக்கள் மட்டும் தாக்கல் செய்து எங்களை இடையூறு செய்து மன உளைச்சலை ஏற்படுத்தி வருகிறார். 04.05.2017 அன்று CMDA சர்வே எண்.21/1, 21/2–ல் உள்ள லே–அவுட் கட்டமைப்பினை ஒப்புதலுக்கு 04.05.2017–ல் ஒப்புதல் அளித்துள்ளது என்பதை தங்களுக்கு தெரியப்படுத்துகிறோம். (பிரேம்ஒர்க்) பல்லாவரம் நகராட்சியில் அஸ்தினாபுரம் G.O.Ms. No.78 H & UD UD 43/04.05.2017, G.O.(Ms) No.172 H & UD UD43 Dt.13.10.2017 அலுவலக ஆணை எண்.15/2018 தேதியில் எங்கள் சங்கத்தின் உறுப்பினர்கள், குடியிருப்பவர்கள் சமர்ப்பித்த நில அனுமதிக்கு அங்கீகாரம் ஆனது CMDA மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது. அதனை தடுக்கும் வகையில் CMDA க்கு மனுக்கள் அனுப்பியும் அதிகாரிகளை மிரட்டியும் அவர்களை பணி செய்ய விடாமல் பொய் புகார்களால் எங்கள் உறுப்பினர்களுக்கு கிடைக்க வேண்டிய சட்டபூர்வமான உரிமைகளை தடுத்து வருகிறார். எனவே, இந்த சூழ்நிலையில் மேற்குறிப்பிட்ட அனைத்து விவரங்கள் தொடர்பாக எங்கள் சங்கத்தின் விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த விண்ணப்பங்கள் மீது தேவையான மற்றும் உடனடி நடவடிக்கை எடுத்து நில அனுமதி மற்றும் 60 ஆண்டுகளுக்கு மேல் கட்டியுள்ள பழைய கட்டிட அனுமதி வழங்க வேண்டும் என்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

மேலும், குறிப்பாக, திருமதி.S.விஜயா மற்றும் திரு.கென்னடி நேசமணி அவருக்கு உறுதுணையாக உள்ள வழக்கறிஞர் திரு.செந்தில் மனோகர் மீதும் சட்டபூர்வ நடவடிக்கை மற்றும் கிரிமினல் வழக்குபதிய உரிய நபர்களுக்கு அனுப்பியுள்ளோம். ஆகவே, நாங்கள் அளிக்கும் மனுக்கள் மீது முறையான விசாரணை செய்து அவர்கள் கொடுக்கும் பொய்ப்புகார்களை ஏற்காமல் சுமார் 65 வருடங்களுக்கு மேலாக வசித்து வரும் 300 குடும்பங்களில் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்கும்படி தங்களை தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

**2.** மேற்கண்ட புகார் மனுவில் அஸ்தினாபுரம், அண்ணா நகர், குடிசை வாழ்வோர் நல உரிமைச் சங்க தலைவர் அவர்கள் சுமார் 300 குடும்பங்கள் 65 ஆண்டுகளுக்கு மேலாக புல எண்கள் 12/4, 21/1, 21/2 மற்றும் 21/3–ல் வசித்து வருவதாகவும் மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண் 22416/2023–ல் 28.8.2023 நாளிட்ட தீர்ப்பில் மேற்சொன்ன சங்கத்தின்

உறுப்பினர்கள் தனித்தனியாக தாம்பரம் மாநகராட்சிக்கு, அவர்களது இடம் மற்றும் கட்டடங்கள் வரன்முறை செய்தல் தொடர்பாக விண்ணப்பிக்கலாம் என்று குறிப்பிட்டுள்ளதன் பேரில், மேற்படி புல எண்கள் 12/4, 21/1, 21/2 மற்றும் 21/3–ல் வசிக்கின்ற நபர்கள் தாம்பரம் மாநகராட்சிக்கு மேற்காணும் பொருள் தொடர்பாக விண்ணப்பித்துள்ளார்களா என்றும், அவ்வாறு விண்ணப்பித்திருந்து அவர்களுக்கு தாம்பரம் மாநகராட்சியில் அனுமதி வழங்கப்பட்டிருந்தால், அவ்வாறு அனுமதி வழங்கப்பட்டவர்களின் விவரங்கள் புல எண்கள் உள்ளடக்கிய அறிக்கையை இம்முறை மன்ற நடுவத்திற்கு அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ 13.02.2025 நாளிட்ட கடிதம் எண்.1472/மா/2024–3ன் மூலம் தாம்பரம் மாநகராட்சி ஆணையரிடம் கோரப்பட்டது.

3. தாம்பரம் மாநகராட்சி ஆணையர் தனது 10.03.2025 நாளிட்ட கடிதம் எண்.2468/2022/எப்1–ன்அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

"தாம்பரம் மாநகராட்சி மண்டலம் 3 அஸ்தினாபுரம் கிராமம், வார்டு எண் 37 அண்ணா நகர் புல எண் 12/4, 21/1, 21/2 மற்றும் 21/3–ல் வரன்முறை திட்ட அனுமதி கோரிய விண்ணப்பங்களுக்கு சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் அனுமதியற்ற மனைப்பிரிவில் சாலைகள் (Road Pattern Framwork) PPD/LO (Regularisation No.2017) 1572/2019 Letter No.Reg.1/10078/2019 Dated 07/2019–ன்படி ஒப்புதல் செய்து வரப்பெற்றது. அதனை தொடர்ந்த மேற்கண்ட முறைப்படுத்தப்பட்ட மனைப்பிரிவில் வரப்பெற்ற தகுதியான மனுக்களுக்கு பட்டியலில் கண்டுள்ள நபர்களுக்கு மாநகராட்சியினால் வரன்முறை அனுமதி வழங்கப்பட்டு உள்ளது." என தெரிவித்துள்ளார்.

தாம்பரம்மாநகராட்சி

மண்டலம் 3

அஸ்தினாபுரம் கிராமம், வார்டு எண்.37 அண்ணா நகர் புல எண்.12/4, 21/1, 21/2 மற்றும் 21/3ல் வரன்முறை திட்ட அனுமதி கோரியவிண்ணப்பங்களுக்கு மாநகராட்சியினால் வரன்முறை அனுமதி வழங்கப்பட்ட விவரப்பட்டியல்

| வ. எண் | விண்ணப்பதாரர் பெயர் | தெருப்பெயர் | புலஎண் | மனை எண் | பரப்பளவு (ச.அடி) | அனுமதி எண் | நாள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | பி. ரவிக்குமார் | புறநானூறுதெரு | 21/2எ2, 21/3சி | 40எ | 1495 | 154 | 12.12.2022 |
| 2 | என். ரகுபதி | திருக்குறள்தெரு | 21/2, 21/1 | 36 வடக்கு எ பகுதி | 1026 | 155 | 12.12.2022 |
| 3 | ஜி. சிந்து | சிலப்பதிகாரம்தெரு | 21/2எபகுதி | 15பி | 999 | 156 | 14.12.2022 |
| 4 | ஈ. ஏழுமலை | சிலப்பதிகாரம்தெரு | 21/2எபகுதி | 29 | 1743 | 157 | 14.12.2022 |
| 5 | விசாலாட்சி | மணிமேகலைகுறுக்குதெரு | 21 பகுதி | 4பி | 721 | 158 | 14.12.2022 |
| 6 | ஆர். நந்தன் | அகநாநூறுதெரு | 21/1 | 12 | 1964 | 159 | 15.12.2022 |
| 7 | வி. சிவாஜி | புறநானூறுதெரு | 21 | 2 பகுதி | 1161 | 160 | 15.12.2022 |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 8 | வி. சரஸ்வதி | சிலப்பதிகாரம்தெரு | 21/2எ1 பகுதி | 45 | 2842 | 161 | 21.12.2022 |
| 9 | ஜி. கற்பகம் | பெரியார்ரோடு | 21 பகுதி | 46 பகுதி | 1517 | 162 | 21.12.2022 |
| 10 | கே. லட்சுமிபதி | ஆர். பி. ரோடு | 21/1 | 8 | 2314 | 163 | 21.12.2022 |
| 11 | எம். விஜயகுமார் | புறநானூறுதெரு | 21/1 | 1 | 1033 | 164 | 21.12.2022 |
| 12 | ஈ. மைதிலி | சிலப்பதிகாரம்தெரு | 21 பகுதி | 4 எ | 721 | 165 | 21.12.2022 |
| 13 | கே. சிவாநந்தம் | அகநானூறுதெரு | 21/1 பகுதி | 40பி | 1254 | 166 | 21.12.2022 |
| 14 | டி.எ. பாஸ்கர் | புறநானூறுதெரு | 21 பகுதி | 4 | 3164 | 168 | 23.12.2022 |
| 15 | வி. தனலட்சுமி | புறநானூறுதெரு | 21/1 | 33 | 1578 | 169 | 31.12.2022 |
| 16 | எஸ். செல்வராஜ் | புறநானூறுதெரு | 21/2 | 2எ | 1036 | 170 | 31.12.2022 |
| 17 | ஜானகிராமன் | ஆர்.பி. ரோடு | 21/1எ1எ1 பகுதி | 19 | 2152 | 17 | 15.03.2024 |
| 18 | எஸ். மோகன்ராஜ் | புறநானூறுதெரு | 21/2எ1, 3எ | 33 | 1842 | 18 | 15.03.2024 |
| 19 | எஸ். வெங்கடேசன் | புறநானூறுதெரு | 21/2எ13எ பகுதி | 35 பகுதி | 990 | 42 | 23.07.2024 |
| 20 | டி. ஜெயந்தி | புறநானூறுதெரு | 21/2எ13எ பகுதி | 27 | 2842 | 43 | 23.07.2024 |
| 21 | வெங்கடேஷ்மற்றும்பலர் | திருக்குறள்தெரு | 21/2எ | 22 | 1056 | 55 | 12.12.2024 |
| 22 | பிரியாநாராயணன் | புறநானூறுதெரு | 21/1 | 15 | 2751 | 005 | 04.02.2025 |

4. மனுதாரரான தலைவர், குடிசை வாழ்வோர் நல உரிமைச் சங்கத்தின் மனு, தாம்பரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு பின்வரும் விவரங்கள் கண்டறியப்பட்டன:

மனுதாரர், செங்கற்பட்டு மாவட்டம், தாம்பரம் மாநகராட்சி, வார்டு எண்.37ல் அமைந்துள்ள அண்ணாநகர், அஸ்தினாபுரம் (சிட்லபாக்கம்), பகுதியில் சுமார் 18.2 ஏக்கர் பகுதியிலுள்ள வீட்டுமனை மற்றும் பழைய (மற்றும் புதிய) கட்டிடங்களின் உரிமையாளர்கள் 65 ஆண்டுகளுக்கு முன்பிருந்து இன்றுவரை உள்ள வரிகள் மற்றும் அரசு கட்டணங்கள் முறையாக செலுத்தி வருவதையும், மேற்கண்ட இந்த சொத்து திரு.ராமச்சந்திர அய்யருக்கு சொந்தமாக இருந்தது எனவும், அதனை அவரது ICB வங்கியில் 1965–ஆம் ஆண்டு அடமானம் வைத்து கடன் பெற்றார் எனவும், கடனை திருப்பி செலுத்தாத காரணத்தினால் 1965ஆம் ஆண்டு அசல் வழக்கு எண்.40/65 மேற்படி ராமச்சந்திர அய்யருக்கு எதிராக செங்கற்பட்டு சட்ட கோர்ட்டில் வழக்கு நடைபெற்றது எனவும், மேற்கொண்டு வங்கியும் (Indo Commercial Bank-Punjab National Bank) இந்த சொத்து தொடர்பாக எந்த

நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும், இந்த சொத்தில் பலர் வீடுகள் கட்டி பல ஆண்டுகளாக வசித்து அரசுக்கு செலுத்த வேண்டிய வரி வகைகளை முறையாக செலுத்தி வருவதாகவும், பஞ்சாப் நேஷனல் வங்கி இந்த வழக்கை தொடர்ந்து நடத்த விரும்பவில்லை எனவும்,மேலும், இந்த சொத்து சம்பந்தமாக எவ்வித வழக்குகளும் நிலுவையில் இல்லை என்றும், மேற்படி குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் வீடு கட்டி மற்றும் குடிசை அமைத்து வாழ்ந்து வரும் அனைவரும் சுமார் 300 குடும்பங்கள் ஒன்றிணைந்து "அண்ணா நகர் குடிசை வாழ்வோர் நல உரிமைச் சங்கம்" என்கிற அமைப்பை ஏற்படுத்தி முறையாக பதிவு செய்து, பதிவு எண்.75/1969 பெற்று இன்று வரை நிர்வகித்து வருவதாகவும், மேலும் வங்கி வழக்குகள் நடந்து கொண்டிருந்த பொழுது சங்கத்திற்கும் திரு.ராமசந்திர அய்யர் மனைவி திருமதி.அனந்தலெட்சுமி அம்மாள் அவர்களுக்கும் இடையே சமசரம் ஏற்பட்டு, அதன்படி மேற்படி இடத்தில் குடியிருக்கும் சுமார் 300 குடும்பங்களுக்கும் அந்த சொத்தை விற்க முடிவு செய்யப்பட்டதாகவும், அதன்படி அப்போதைய சங்கத்தின் தலைவர் திரு.முத்துகிருஷ்ணன் அவர்களுக்கு பொது அதிகாரம் அளித்து பல்லாவரம் பதிவுத்துறை அலுவலகத்தில் சட்டப்படி பதிவு செய்யப்பட்டது என்றும், அந்த சொத்தில் குடியிருப்பவர்கள் அவரவர் வைத்திருக்கும் இடத்தினை பத்திர பதிவு செய்து சங்கத்தின் மூலம் விற்பனை தொகையை வங்கிக்கும் திருமதி.அனந்தலெட்சுமி அம்மாள் அவர்களுக்கு கோர்ட்டு மூலமாக செலுத்தப்பட்டது என்றும், விற்பனை பத்திரம் பெற்ற சங்கத்தின் உறுப்பினர்களால் போடப்பட்ட குடிசைகளை அகற்றி விட்டு காலமாற்றத்திற்கு ஏற்ப தங்கள் குடியிருப்புக்கு தேவையான கட்டிடங்களை கட்டிக்கொண்டு குடும்ப உறுப்பினர்களுடன் சுமார் 60 ஆண்டுகள் வாழ்ந்து வருவதாகவும், சம்பந்தப்பட்ட வருவாய்துறை அதிகாரிகள் மற்றும் இதர துறை அரசு அதிகாரிகள் நகர மக்கள் முறையாக நகராட்சிக்கு அனைத்து வரிகள் செலுத்தி வருவதால் அரசே முன்வந்து இருக்கின்ற மதிப்பீடு ஆவணங்களை அடிப்படையாக வைத்து பதிவு பெற்றவர்கள் மற்றும் பதிவு பெறாதவர்களும் பல வருடங்களாக வசித்து வரும் காரணத்தினால் அவர்களின் ஆவணங்களை சரிப்பார்த்து **TSLR Extracts** பட்டாவை வழங்கியுள்ளனர் எனவும், பத்திரபதிவுகள் நடந்துக்கொண்டிருந்த நேரத்தில் திருமதி.அனந்தலட்சுமி அம்மாள் அவர்களும் காலமாகிவிட்ட காரணத்தினால் பத்திர பதிவுசெய்து செய்யாதவர்களின் பதிவு நின்று விட்டது எனவும், மேலும் அவர்களுக்கு யாரும் நேரடியாக வாரிசு இல்லாத காரணத்தினால் கடன் கொடுத்த வங்கிக்கும் இங்கு குடியிருப்போருக்கும் வழக்கு நடந்து வந்ததாகவும், இடம் சம்பந்தமாக வங்கி நீதிமன்றத்தினை நாடும் சமயத்தில் நீதிமன்றத்தால் வங்கிக்கு செலுத்த வேண்டிய தொகையை வசூல் செய்வது மட்டுமே அன்றி குடியிருப்பவர்களை காலிச்செய்ய வைக்க வங்கிக்கு உரிமை இல்லை என்று நீதிமன்ற தீர்ப்பும் வழங்கியுள்ளது எனவும், இவ்வாறிருக்க S.விஜயா க/பெ.கென்னடிநேசமணி என்பவர், தான் மேற்படி திருமதி.அனந்தலெட்சுமி அம்மாள் வளர்ப்பு மகள் என்று கூறிக்கொண்டு தனக்குதான் இந்த சொத்தில் உரிமை உள்ளதாக பொய்யான கதைக்கட்டி பலப்பொய்யான மனுக்கள் அனுப்பி தொடர்ந்து அரசு அதிகாரிகளை மிரட்டியும், மேற்படி குடியிருப்பவர்களையும் கடிதம் மற்றும் தொலைப்பேசி வாயிலாக மிரட்டியும் வருகின்றார் என்பது மனுதாரர் புகார் மனுவிலிருந்து அறிய முடிகிறது.

மேற்படி எஸ்.விஜயா என்பவருக்கு இந்த சொத்தில் எந்தவித உரிமையும் இல்லை என்றும், அந்த சொத்தின் சட்டபூர்வ உரிமையாளரின் கூற்றை உறுதிப்படுத்தும் ஒரு ஆவணமோ அல்லது பதிவேடு கூட இல்லாதவருக்கு அந்தப் புகார்களை தாக்கல் செய்ய எந்தவிதமான உரிமையும் இல்லை எனவும், மேற்படி S.விஜயாவிற்கு எதிராக போலி ஆவணம் தயார் செய்ததாக தாம்பரம் கற்றறிந்த Judicial Magistrate கோர்ட்டில் C.C.No.112 of 2020 என்ற கிரிமினல் வழக்கு இன்று வரை நிலுவையில் உள்ளது என்றும், மேலும், அவர் மீது கிரிமினல் வழக்கு உள்ளதால், அவரது கணவர் பெயரில் மனுக்களை அனுப்பி மிரட்டி பணம் பறிக்கும் நோக்கத்துடன் செயல்பட்டு வருவதாகவும், மேலும்,

மாண்புமிகு உயர்நீதிமன்றத்தின் உத்தரவின் பேரில் தாம்பரம் மாநகராட்சி அலுவலகம், மனுதாரர் சங்கத்துடன் விரிவான விசாரணை நடத்தி எஸ்.விஜயா உள்ளிட்ட தரப்பினருக்கு நோட்டீஸ் அனுப்பியிருந்தனர் எனவும், அவர்கள் எந்த விசாரணைக்கும் ஆஜராக இல்லை எனவும் பதிலும் தரவில்லை எனவும், ஆனால் மனுதாரரின் சங்க உறுப்பினர்கள் சமர்ப்பித்த அனைத்து பதிவுகள் மற்றும் ஆவணங்களை தொடர்ந்து தாம்பரம் மாநகராட்சி உத்தரவு ந.க.எண்.2468/2022/F1 தேதி 02.08.2022–ல் எஸ்.விஜயா மேற்குறிப்பிட்ட சொத்தின் மீது உரிமையை நிரூபிக்கும் வகையில் எந்த ஆவணத்தையும் சமர்ப்பிக்கவில்லை எனவும், மேலும் விசாரணைக்கும் ஆஜராகவில்லை எனவும், அதனால் எந்தவொரு உரிமையும் இல்லையென்று உத்திரவு பிறப்பித்துள்ளார் எனவும், 04.05.2017 அன்று CMDA சர்வே எண்.21/1, 21/2–ல் உள்ள லே–அவுட் கட்டமைப்பிற்கு 04.05.2017–ல் ஒப்புதல் அளித்துள்ளது என்பதையும், (பிரேம்ஒக்) பல்லாவரம் நகராட்சியில் அஸ்தினாபுரம் G.O.Ms. No.78 H & UD UD 43 Dated 04.05.2017, G.O.(Ms) No.172 H & UD UD43 Dated 13.10.2017 அலுவலக ஆணை எண்.15/2018 நாள் 12.12.2018 சங்கத்தின் உறுப்பினர்கள், குடியிருப்பவர்கள் சமர்ப்பித்த நில அனுமதிக்கு அங்கீகாரம் ஆனது CMDA மூலம் ஒப்புதல் வழங்கியுள்ளது எனவும், இந்த சூழ்நிலையில் மேற்குறிப்பிட்ட அனைத்து விவரங்கள் தொடர்பாக எங்கள் சங்கத்தின் விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்த விண்ணப்பங்கள் மீது தேவையான மற்றும் உடனடி நடவடிக்கை எடுத்து நில அனுமதி மற்றும் 60 ஆண்டுகளுக்கு மேல் கட்டியுள்ள பழைய கட்டிட அனுமதி வழங்க வேண்டும் எனவும் மேலும், குறிப்பாக, திருமதி.எஸ்.விஜயா மற்றும் திரு.கென்னடி நேசமணி ஆகியோருக்கு உறுதுணையாக உள்ள வழக்கறிஞர் திரு.செந்தில் மனோகர் மீதும் சட்டபூர்வ நடவடிக்கை மற்றும் கிரிமினல் வழக்குபதிவு செய்ய உரிய நபர்களுக்கு அனுப்பியுள்ளோம் எனவும், ஆகவே, மனுதாரர் அளிக்கும் மனுக்கள் மீது முறையான விசாரணை செய்து, பொய்ப்புகார்களை ஏற்காமல் சுமார் 65 வருடங்களுக்கு மேலாக வசித்து வரும் 300 குடும்பங்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க கோரியிருப்பது அறிய முடிகிறது.

மனுதாரர்கள் குறிப்பிட்டுள்ள புல எண்களில் உள்ள இடம் தொடர்பாக இவஞ்சிலிக்கல் சர்ச் ஆப் இந்தியா சார்பாக பிஷப் திரு. டேவிட் ஒநேசிமு என்பவரால் செங்கல்பட்டு மாவட்ட முதன்மை நீதிமன்றத்தில் **397/2024 மற்றும் 398/2024** வழக்கு திருமதி விஜயா மற்றும் அண்ணா நகர் குடிசை வாழ்வோர் நல சங்கத்தினையும் சேர்த்து வழக்கு தொடரப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது.

மேலும் திருமதி விஜயாவிற்கு எதிராக போலி ஆவணம் தயார் செய்ததாக தாம்பரம் **Judicial Magistrate** கோர்ட்டில் **C.C.No.112 of 2020** என்ற கிரிமினல் வழக்கும் இன்று வரை நிலுவையில் உள்ளதை குடிசை வாழ்வோர் நல உரிமை சங்க தலைவரின் மனுவிலிருந்து அறிய முடிகிறது.

மேலும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் சர்வே எண் 12/4, 21/1, 21/2, மற்றும் 21/3 தொடர்பாக அண்ணா நகர் குடிசை வாழ்வோர் நல உரிமை சங்கத்தினால் மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண். W.P.No.12024 of 2022 and W.M.P No.11442 of 2022-ல் 06.05.2022 நாளிட்டு பின்வருமாறு தீர்ப்பு வழங்கியுள்ளது.

> "7. Considering the above facts and circumstances of the case and having regard to the submissions made on either side, this court directs the first respondent to hear the petitioner association, while conducting enquiry as per the order dated 17.03.2022 passed by this Court in W.P No.10647 of 2019, filed by the third respondent, with regard to title as well as the possession of the property in question, complete the same on

merits and in accordance with law, within a period of four weeks from the date of receipt of a copy of this order."

மேலும் மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் W.P.No.22416 of 2023 and W.M.P No.21820 of 2023- ல் **28.08.2023** நாளிட்டு பின்வருமாறு தீர்ப்பு வழங்கியுள்ளது.

"3. The learned counsel appearing for the 4th respondent submits that pursuant to the representation submitted by the petitioner, they have issued notice to the petitioner's association directing them to give details of the applications submitted by the members of the association and the petitioner has not given the details. If any such details are furnished by the petitioner association, the application will be considered in accordance with law.

4. If members of the petitioner's association submitted an application for regularization of their plot and building, it is for them to file appropriate writ petition. The petitioner association cannot maintain an application seeking direction to respondents to consider the applications submitted by the individual members. Accordingly, the writ petition is dismissed with liberty to the members of the petitioner association to file appropriate application. Consequently, connected miscellaneous petition is closed. No costs."

சர்வே எண் 12/4, 21/1, 21/2, மற்றும் 21/3 தொடர்பாக, அண்ணா நகர் குடியிருப்பு பகுதியில் உள்ள 18 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள சுமார் 250 குடும்பங்களுக்கு மேல் உள்ள கட்டிடங்களின் உரிமையாளருக்கு தமிழ்நாடு அரசு மூலம் BLR பட்டா 2003 ஆம் வருடம் வழங்கப்பட்டது. மேலும், மேற்கண்ட மனைப் பிரிவினை தமிழ்நாடு அரசு மூலம் கொண்டு வரப்பட்ட வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர வளர்ச்சி குழுமத்தின் மூலம் PPD/LO No.1572/2019 என எண்ணிடப்பட்டு மனைப் பிரிவுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது எனவும் மேற்கண்ட மனைப் பிரிவில் மனைகள் வரன்முறைப்டுத்தப்பட்டு வருகிறது என்பவை தாம்பரம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கையின் மூலம் அறிய முடிகிறது.

எனவே, மனுதாரர் தனது புகாரில் குறிப்பிட்டுள்ள பொருள் தொடர்பாக மேலே காணும் நேர்வுகளில் மனுதாரரான குடிசை வாழ்வோர் நல உரிமைச் சங்கத்தினையும், திருமதி விஜயாவினையும் விசாரித்து முடிவெடுக்குமாறு பிரதிவாதியான தாம்பரம் மாநகராட்சியினை (முன்னர் பல்லாவரம் நகராட்சி) அறிவுறுத்தியும், சங்கத்தின் உறுப்பினர்கள் தங்களது மனைகள் மற்றும் கட்டிடங்களை வரன்முறை படுத்த மனுக்கள் அளிக்கும் நேர்வினில் உரிய ரிட் மனு தாக்கல் செய்யலாம் எனவும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் ஆணையிட்டுள்ள நிலையிலும், மேற்கண்ட பொருள் தொடர்பாக தாம்பரம்

மாநகராட்சி நடவடிக்கை எடுத்து வருவதும் அறிக்கையின் மூலம் அறியப்படுவதாலும், மனுதாரரின் 04.12.2024 நாளிட்ட மனு மீது இம்முறைமன்ற நடுவத்தால் மேல்நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் எழவில்லை என்று முடிவு செய்து அவ்வாறே இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு ஜூலை திங்கள்17–ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1) தலைவர்,
குடிசை வாழ்வோர் நல உரிமைச் சங்கம்,
எண் 1, பெரியார் சாலை, அண்ணா நகர்,
அஸ்தினாபுரம்,
சிட்லபாக்கம்,
சென்னை–600 064.

2) ஆணையர்,
தாம்பரம் மாநகராட்சி,
தாம்பரம்.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

4) இணை இயக்குநர்/ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028.

<u>நகல்</u>

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்,
இ.கோ. / உதிரி.

//ஆணைப்படி /அனுப்பப்படுகிறது //

செயலாளர்.